**செ.வெ.எண்: 14** **நாள்:09.01.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

அரியலூர் மாவட்டம், திருச்சி, மீன்துறை துணை இயக்குநர் மண்டலத்தில் அரியலூர், மீன்துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள, திருமானூர் மீன்வள சார் ஆய்வாளர் அலவலகத்தில் ஒரு மீன்வள உதவியாளர் காலிப்பணியிடம் நேர்காணல் மூலம் நிரப்பப்பட உள்ளது. விருப்பம் உள்ள 30 வயதிற்குட்பட்ட (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 35 வயது வரை) ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். நேர்காணலில் கலந்துகொள்வதற்கான தகுதிகள், தமிழ் எழுதப்படிக்க தெரிந்திருத்தல் வேண்டும். நீச்சல், வலைப்பின்னுதல், வலை சரிசெய்தல் மற்றும் வீச்சு வலை வீசுதல் தெரிந்திருத்தல் வேண்டும்.

விருப்பமுள்ள நபர்கள் தங்கள் விண்ணப்பங்களை 08.02.2020 மாலை 5.00 மணிக்குள் கிடைக்கப்பெறும் வண்ணம் மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்), 17/2 சமது பள்ளி தெரு, காஜா நகர், மன்னார்புரம், திருச்சி 620 020 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் மற்றும் கூடுதல் விவரங்களுக்கு மேற்கண்ட முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**